# இயற்கை வேளாண்மை பயிற்சி முகாம்



அமராவதிபுதூர் கிராமப்புறப் பயிற்சி மையத்தில் சனிக்கிழமை நடைபெற்ற முகாமில் பேசிய அமுல், ரிச்ப்ளஸ் நிறுவனங்களின் தலைவர் அசோக் சாரங்கன்.

**சிவகங்கை, செப். 6:** சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, அமுல், ரிச்ப்ளஸ் இணைந்து இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி முகாமை சனிக்கிழமை நடத்தின.

அமராவதிபுதூர் கிராமப்புறப் பயிற்சி மையத்தில் நடைபெற்ற இந்த முகாமுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காரைக்குடி மண்டல மேலாளர் லட்சுமி தலைமை வகித்தார்.

அமுல், ரிச்ப்ளஸ் நிறுவனங்களின் தலைவர் அசோக் சாரங்கன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் இயற்கை வேளாண்மை ஒருங்கிணைப்பாளர் கார்த்திக், ஸ்ரீதர் ஆகியோர் பேசினர்.

இதில் இயற்கை வேளாண்மையின் நன்மைகள், நிலையான விவசாயம், இயற்கை விளைப்பொருள்களுக்கு சந்தை வாய்ப்புகள் குறித்தும், அமுல், ரிச்ப்ளஸின் இயற்கை சான்றிதழ், மதிப்புக் கூட்டுதல், விவசாயிகளுக்கான வருமானம் ஈட்டும் வழிகள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

இந்த முகாமில் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். முகாமுக்கான ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் எஸ். பிரவீன், வங்கி அதிகாரிகள், ஊழியர்கள் செய்தனர்.